# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 181/மா/2025
நாள் 22.06.2026

D. ராமதிலகம்
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

மதுரை–625 002, சொக்கிகுளம், வல்லபாய் ரோடு, கதவு எண். 2/4 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி D.ராமதிலகம் என்பவரின் 20.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2025 அன்று பெறப்பட்டு, 181/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–625 002, சொக்கிகுளம், வல்லபாய் ரோடு, கதவு எண். 2/4 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி D.ராமதிலகம் என்பவர் தனது 20.02.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு எண் 32, வல்லபாய் ரோடு, கதவு எண் 2/4, பழைய வரிவிதிப்பு எண் 115/349359க்கு புதிய வரிவிதிப்பு எண் 115/032/3902755க்குட்பட்ட மனைவீடு வகையறா எனக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட புதிய கட்டிடத்திற்கு 1.10.2013 முதல் குடியிருப்பு விகிதத்தில் ரூ.19132/– என வரிவிதிக்கப்பட்டு நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் 1.4.2022 பொதுச்சீராய்வில் ரூ.19132/–லிருந்து 100% உயர்வு செய்து அரைவருட வரியாக ரூ.38264/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வரிவிதிப்பை ஆட்சேபித்து தங்கள் முன் மனு சமர்ப்பிக்கப்படுகிறது.

(1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 52 மற்றும் 53 நாள் 30.3.2022 மற்றும் அதன் தொடராக வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/R1 நாள் 1.4.2022ன் பிரகாரம் பொது சீராய்வு நடத்தப்படவில்லை.

(2) சுற்றறிக்கையில் கண்டுள்ள கால அட்டவணை முறையாக கடைப்பிடிக்கப்படவில்லை.

(3) 01.04.2022 பொது சீராய்வுக்கான சிறப்பு அறிவிக்கை கட்டிட உரிமையாளர்களுக்கு சார்வு செய்யப்படாமல் நேரடியாக கேட்பு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. இதனால், வரிவிதிப்பில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி சீராய்வு விண்ணப்பம் செய்வதற்கோ, மேல்முறையீடு செய்வதற்கோ 15 தினங்கள் கால அவகாசம் வழங்கப்படவில்லை.

| 01.04.2008 பொது சீராய்வில் வழங்கப்பட்ட கட்டிட கழிவு | 01.04.2022 பொது சீராய்வில் வழங்கப்பட வேண்டிய கட்டிட கழிவு |
|---|---|
| 5 வருடம் வரை – கழிவு இல்லை. | 5 வருடம் வரை – கழிவு இல்லை. |
| 5 முதல் 15 வருடம் வரை – 10% கழிவு | 5 முதல் 15 வருடம் வரை – 10% கழிவு |
| 15 முதல் 25 வருடம் வரை – 15% கழிவு | 15 முதல் 25 வருடம் வரை – 15% கழிவு |
| 25 வருடத்திற்கு மேல் – 20% கழிவு | 25 வருடத்திற்கு மேல் – 20% கழிவு |

| 01.04.2008 பொது சீராய்வில் வழங்கப்பட்ட உச்ச வரம்பு | 01.04.2022 பொது சீராய்வில் வழங்கப்பட வேண்டிய உச்ச வரம்பு |
|---|---|
| 01.04.2007க்கு பின் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் – வரி உயர்வு இல்லை. | 01.10.2021க்கு பின் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் – வரி உயர்வு இல்லை. |
| 01.04.2006 முதல் 30.09.2007 முடிய – 5% | 01.04.2020 முதல் 30.09.2021 முடிய – 5% |
| 01.04.2005 முதல் 31.03.2006 முடிய – 10% | 01.04.2019 முதல் 31.03.2020 முடிய – 10% |
| 01.04.2004 முதல் 31.03.2005 முடிய – 15% | 01.04.2018 முதல் 31.03.2019 முடிய – 15% |
| 01.04.2003 முதல் 31.03.2004 முடிய – 20% | 01.04.2017 முதல் 31.03.2018 முடிய – 20% |

(4) 1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் 118ன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(5) மதுரை மாநகராட்சி சட்டம் அட்டவணை 2 பாகம் 2 பிரிவு 1 முதல் 6 வரையிலான சட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை.

ஆகவே, பொதுச்சீராய்வில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை மறுபரிசீலனை செய்து ஏற்கனவே 1.10.2013ல் விதிக்கப்பட்ட அரைவருட வரியான ரூ.19132/–லிருந்து தற்போது விதித்திருக்கும் ரூ.38,264/–ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின் பிரகாரம் 10% கட்டிட கழிவு வழங்கி உத்தரவு பிறப்பிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 20.05.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு), வார்டு 32, வல்லபாய் ரோடு, கதவு எண் 2/4, வரிவிதிப்பு எண் 115/032/902785–க்குட்பட்ட கட்டிடம் இடிக்கப்பட்டு வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட புதிய கட்டிடத்திற்கு 01.10.2013 முதல் குடியிருப்பு விகிதத்தில் ரூ.19,132/– என விதிக்கப்பட்ட சொத்துவரியினை 01.04.2022 பொது சீராய்வில் 100 % உயர்வு செய்து ரூ.19132/– லிருந்து ரூ.38264/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மனுதாரர் திருமதி D. ராமதிலகம் என்பவர் அளித்த புகார் மனுவிற்கு எதிராக மதுரை மாநகராட்சி சார்பில் எழுத்துபூர்வ அறிக்கை தங்களின் கவனப் பார்வைக்கும், உரிய உத்தரவிற்கும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரரது சொத்துவரி குடியிருப்பு வரிவிதிப்பு கட்டிடம் 2013ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டபின் சொத்துவரி "A" மதிப்பீட்டில் 01.10.2013 முதல் அரையாண்டு முதல் பின்வரும் கட்டிட அளவுகளுக்கு,

| | |
|---|---|
| தரைதளம் | 1664 சதுரடி |
| முதல்தளம் | 1664 சதுரடி |
| இரண்டாம் தளம் | 572 சதுரடி |

சொத்து வரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/– என நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்திய அரசின் 15வது நிதிக்குழு அறிக்கையில் பரிந்துரைத்தவாறு தமிழ்நாடு அரசு ஆணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 30.03.2022 வெளியிட்ட அவ்வரசாணையில் வலியுறுத்தியபடி பொதுசீராய்வின் போது சொத்துவரி மாற்றியமைக்கக் குழு அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி 01.04.2022 முதல் சொத்துவரி உயர்வு பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது.

அ. குடியிருப்பு சொத்துக்கள்

| பரப்பளவு (சதுரடியில்) | GCC Core city வரி உயர்வு காரணி | GCC added areas and other Municipal Corporation வரி உயர்வு காரணி |
|---|---|---|
| < = 600 | 1.5 | 1.25 |
| 601 – 1200 | 1.75 | 1.5 |
| 1201 – 1800 | 2 | 1.75 |
| > = 1800 | 2.5 | 2 |

மேற்படி விதிமுறைகளின்படி அரசாணையில் குறிப்பிடப்பட்ட சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில் நடப்பில் இருந்த அனைத்து சொத்துவரி வரிவிதிப்புகளுக்கும் சொத்துவரி உயர்வு செய்து 01.04.2022 முதல் சொத்துவரி திருத்தி அமைக்கப்பட்டது.

அவ்வாறே இப்புகார் மனுதாரரது சொத்துவரி வரிவிதிப்பு எண்.115/032/902785ன் சொத்து மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அமைவிடத்தில் உள்ளதையும், கட்டிட பயன்பாடு குடியிருப்பு அடிப்படையில் பரப்பளவு (சதுரடியில்) உள்ளதை கருத்தில் கொண்டும் நடப்பில் இருந்த சொத்துவரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19132/– என்றிருந்ததை ரூ.38264/– ஆக வரி உயர்வு காரணி 2 என்ற அடிப்படையில் 01.04.2022 முதல் வரி உயர்வு செய்யப்பட்டது. சரியான நடவடிக்கை ஆகும்.

நகராட்சிகளில் சொத்துவரி நிர்ணயிப்பது தொடர்பான சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/RI, நாள் 01.04.2022 நகராட்சிகளுக்காக வெளிடப்பட்டது. அதேசமயம் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் யாவும் அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 30.03.2022ஐ பின்பற்றி 01.04.2022 முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி குறிப்பிட்ட சுற்றறிக்கை நகராட்சிகளுக்கானது, நகராட்சிகள் சொத்துவரி நிர்ணயிக்க வரி உயர்வு உச்ச வரம்பு மற்றும் கட்டிடத்திற்கு கழிவுகள் அனுமதிப்பது குறித்து வெளியிடப்பட்ட நிபந்தனைகள் முற்றிலும் நகராட்சிகளுக்கானது. அவைகள் மாநகராட்சிகளுக்கு பொருந்தாது. ஆனால் இப்புகார் மனுதாரர் தங்களது வசதிக்காக மேற்படி நகராட்சிக்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினை மேற்கோள்காட்டி, நகராட்சியில் உள்ள நடைமுறைகள், பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளை மாநகராட்சி

எல்லைக்குள் அமைந்துள்ள இப்புகார் மனுதாரர்களது கட்டிடத்திற்கு சொத்துவரி உயர்வு செய்ய கடைபிடிக்கக் கோரி நகராட்சிக்கான நடைமுறைகளை இப்புகார் மனுதாரரது கட்டிடத்திற்கான சொத்துவரி நிர்ணயத்திற்கு பின்பற்றி 01.04.2022 முதல் சொத்துவரி உயர்வு செய்ய கோரிய காரணிகளினால் ஏற்றுக் கொள்ளவில்லை. மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்ட சொத்துவரி உயர்வு காரணி அடிப்படையில் இப்புகார் மனுதாரரது சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971–ல் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விதிமுறைகளையும் முறையாக பின்பற்றி சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கான வயது கழிவு வழங்குவது மாநகராட்சி பகுதிகளுக்கு பொருந்தாது.

அவ்வாறே இப்புகார் மனுதாரரது திருமதி D.ராமதிலகம், சொத்துவரி வரிவிதிப்பு எண்.115/032/902785க்குரிய சொத்து வரி அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 30.03.2022 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.33, நாள் 23.06.2022–ஐ பின்பற்றி 01.04.2022 முதல் பொது சீராய்வின்படி ஒரு அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.19,132/–லிருந்து ரூ.38,264/– ஆக சொத்துவரி உயர்வு செய்யப்பட்டது சரியானதாகும்.

அதன்பிறகு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 05.09.2024ன்படி 01.10.2024 முதல் சொத்துவரி 6 சதவீதம் உயர்த்தப்பட்டது.

எனவே புகார் மனுதாரரது சொத்திற்கு மதுரை மாநகராட்சி தன்னிச்சையாக பாரபட்சத்துடன் வரிஉயர்வு செய்யவோ, சொத்துவரி மாற்றியமைக்கவோ வழிவகை இல்லை என்ற விபரம் அறிக்கையாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

5. மனுதாரர் சார்பாக அவரது கணவர் திரு. N. தர்மராஜ் என்பவர் 26.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2 வார்டு எண் 32 வல்லபாய் ரோடு, கதவு எண். 2/4,பழைய வரிவிதிப்பு எண் 115/349359க்கு புதிய வரிவிதிப்பு எண். 15/032/902785க்குட்பட்ட மனைவீடு வகையறா எனக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட புதிய கட்டிடத்திற்கு 01.10.2013 முதல் குடியிருப்பு விகிதத்தில் ரூ.19,132/– என வரிவிதிக்கப்பட்டு நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் 01.04.2022 பொதுச்சீராய்வில் ரூ.19,132/–லிருந்து 100% உயர்வு செய்து அரைவருட வரியாக ரூ.38,264/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரியினை பொதுச்சீராய்வில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை மறுபரிசீலனை செய்து ஏற்கனவே 01.10.2013–ல் விதிக்கப்பட்ட அரைவருட வரியான ரூ.19,132/–லிருந்து தற்போது விதித்திருக்கும் ரூ. 38,264/–ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின் பிரகாரம் 10% கட்டிட கழிவு வழங்கி உத்தரவு பிறப்பிக்கும்படி இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி வருவாய் அலுவலர் 26.05.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

மனுதாரரது கதவு எண்.2/4ற்கான மதுரை–2, சொக்கிகுளம், வல்லபாய் பட்டேல் ரோடில் உள்ள சொத்துவரி எண்.115/032/902785 குடியிருப்பு வரிவிதிப்பு எண். கட்டிடம்

2013–ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டபின் சொத்து வரி "A" மதிப்பீட்டில் 01.10.2013 முதல் அரையாண்டு முதல் பின்வரும் கட்டிட அளவுக்கு,

| | |
|---|---|
| தரைதளம் | 1664 சதுரடி |
| முதல்தளம் | 1664 சதுரடி |
| இரண்டாம் தளம் | 572 சதுரடி |

சொத்து வரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/– என நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்திய அரசின் 15வது நிதிக்குழு அறிக்கையில் பரிந்துரைத்தவாறு தமிழ்நாடு அரசு ஆணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022–ன்படி 01.04.2022 முதல் சொத்துவரி உயர்வு பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது.

<u>அ.குடியிருப்பு சொத்துக்கள்</u>

| பரப்பளவு (சதுரடியில்) | GCC Core city வரி உயர்வு காரணி | GCC added areas and other Municipal Corporation வரி உயர்வு காரணி |
|---|---|---|
| < = 600 | 1.5 | 1.25 |
| 601 – 1200 | 1.75 | 1.5 |
| 1201 – 1800 | 2 | 1.75 |
| > = 1800 | 2.5 | 2 |

சொத்துவரி விதிப்பு எண்.115/032/902785–ன் சொத்து மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அமைவிடத்தில் உள்ளதால், கட்டிட பயன்பாடு குடியிருப்பு அடிப்படையில் பரப்பளவு (சதுரடியில்) உள்ளதை கருத்தில் கொண்டு நடப்பு சொத்துவரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/– என்றிருந்ததை ரூ.38,264/– ஆக வரி உயர்வு காரணி 2 என்ற அடிப்படையில் 01.04.2022 முதல் வரி உயர்வு செய்யப்பட்டது.

நகராட்சிகளில் சொத்துவரி நிர்ணயிருப்பது தொடர்பான சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/RI, நாள் 01.04.2022 நகராட்சிக்காக வெளிடப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் யாவும் அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022–ஐ பின்பற்றி 01.04.2022 முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட சுற்றறிக்கை நகராட்சிக்கானது, நகராட்சிகள் சொத்துவரி நிர்ணயிக்க வரி உயர்வு உச்ச வரம்பு மற்றும் கட்டிடத்திற்கு கழிவுகள் அனுமதிப்பது குறித்து வெளியிடப்பட்ட நிபந்தனைகள் முற்றிலும் நகராட்சிக்கானது. அவைகள் மாநகராட்சிக்கு பொருந்தாது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971–ல் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விதிமுறைகளையும் முறையாக பின்பற்றி சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கான வயது கழிவு வழங்குவது மாநகராட்சி பகுதிகளுக்கு பொருந்தாது.

ஆனால் மனுதாரரது சொத்துவரி விதிப்பு எண்.115/032/902785க்குரிய சொத்து வரி அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.33, நாள் 23.06.2022–ஐ பின்பற்றி 01.04.2022 முதல் பொது சீராய்வின்படி ஒரு அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.19,132/–லிருந்து ரூ.38,264/– ஆக அரசு கொள்கையின் அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது என்ற

விபரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான மனுதாரரின் கணவர்அளித்த வாக்குமூலம், மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு), உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு எண் 32, வல்லபாய் ரோடு, கதவு எண் 2/4, பழைய வரிவிதிப்பு எண்.115/349359க்கு புதிய வரிவிதிப்பு எண் 115/032/902785க்குட்பட்ட மனைவீடு வகையறா தனக்கு பாத்தியப்பட்டதாகும் என்பதும், மேற்படி பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட புதிய கட்டிடத்திற்கு 01.10.2013 முதல் குடியிருப்பு விகிதத்தில் ரூ.19,132/– என வரிவிதிக்கப்பட்டு நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், இந்நிலையில் 01.04.2022 சொத்துவரி பொதுச்சீராய்வில் ரூ.19,132/–லிருந்து 100% உயர்வு செய்து அரைவருட சொத்து வரியாக ரூ.38,264/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட வரியினை பொதுச்சீராய்வில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை மறுபரிசீலனை செய்து ஏற்கனவே 01.10.2013–ல் விதிக்கப்பட்ட அரைவருட வரியான ரூ.19,132/–லிருந்து தற்போது விதித்திருக்கும் ரூ. 38,264/–ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின் பிரகாரம் 10% கட்டிட கழிவு வழங்கி உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் அவரது கணவரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மதுரை–2, சொக்கிகுளம், வல்லபாய் பட்டேல் ரோடு, கதவு எண். 2/4–ல் உள்ள மனுதாரரது குடியிருப்பு சொத்துவரி விதிப்பு எண்.115/032/902785–ன் கட்டிடமானது 2013–ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டபின், சொத்து வரி "A" மதிப்பீட்டில் 01.10.2013 முதல் அரையாண்டு முதல், தரை தளம் 1664 சதுரடி, முதல் தளம் 1664 சதுரடி மற்றும் இரண்டாம் தளம் 572 சதுரடி கட்டிட அளவுக்கு சொத்து வரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/– என நிர்ணயம் செய்யப்பட்டது என்பதும், தமிழ்நாடு அரசு ஆணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை, நாள் 30.03.2022–ன்படி 01.04.2022 முதல், மனுதாரரின் கட்டிட பயன்பாடு குடியிருப்பு அடிப்படையில் பரப்பளவு (சதுரடியில்) உள்ளதை கருத்தில் கொண்டு நடப்பு சொத்துவரி ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/– என்றிருந்ததை ரூ.38,264/– ஆக வரி உயர்வு செய்யப்பட்டது என்பதும், நகராட்சிகளில் சொத்துவரி நிர்ணயிருப்பது தொடர்பான சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/RI, நாள் 01.04.2022 நகராட்சிக்காக வெளியிடப்பட்டது என்பதும், இச்சுற்றறிக்கை சொத்துவரி நிர்ணயிக்க வரி உயர்வு உச்ச வரம்பு மற்றும் கட்டிடத்திற்கு கழிவுகள் அனுமதிப்பது குறித்து வெளியிடப்பட்ட நிபந்தனைகள் முற்றிலும் நகராட்சிக்கானது என்பதும், கட்டிடத்திற்கான வயது கழிவு வழங்குவது மாநகராட்சி பகுதிகளுக்கு பொருந்தாது என்பதும், மனுதாரரது சொத்துவரி விதிப்பு எண்.115/032/902785க்குரிய சொத்து வரி அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.33, நாள் 23.06.2022–ஐ பின்பற்றி 01.04.2022 முதல் பொது சீராய்வின்படி ஒரு அரையாண்டிற்கு சொத்துவரி ரூ.19,132/–லிருந்து ரூ.38,264/– ஆக அரசு கொள்கையின் அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளது என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை–2, சொக்கிகுளம், வல்லபாய் பட்டேல் ரோடு, கதவு எண். 2/4–ல் உள்ள மனுதாரரது குடியிருப்பு சொத்துவரி விதிப்பு எண்.115/032/902785–ன் கட்டிடத்திற்கு தமிழ்நாடு அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.33, நாள் 23.06.2022–ஐ பின்பற்றி 01.04.2022 முதல் பொது சீராய்வின்படி

ஒரு அரையாண்டிற்கு ரூ.19,132/–லிருந்து ரூ.38,264/– ஆக வரி உயர்வு செய்யப்பட்டது, அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில் உள்ளது என்று அறிய முடிவதால், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திருமதி D.ராமதிலகம்,
கதவு எண்2/4, வல்லபாய் ரோடு,
சொக்கிகுளம், மதுரை–625 002.

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
பந்தய திடல் சாலை, மதுரை–625 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 23/6/26

22/6/26